தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1975 நவம்பர் 4.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

சோழன்பேட்டையிலுள்ள கிளை வாய்க்கால்

*2 குறுகிய கால வினா—**திரு. என். கிட்டப்பா**: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், சோழன்பேட்டை பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள மாதுளம் வாய்க்காலின் கிளை வாய்க்காலினை தூர்த்து விடப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) கால்வாய் பழைய நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, சோழன்பேட்டை மாதுளம் வாய்க்காலின் துணை வாய்க்கால் ஏறத்தாழ இரண்டு பர்லாங்கு தூரத்திற்கு ஒரு ஏக்கர் பரப்பளவுக்கு தனிப்பட்ட நபர் ஒருவரால் தூர்க்கப்பட்டு, பாதை போடப்பட்டுவிட்டது. அந்தப் பகுதியில் உள்ள ஏறத்தாழ 250 ஏக்கரா பயிர் செய்யக் கூடிய விவசாயிகள், குத்தகைதாரர்கள், அதனால் பாசனத்திற்கு வசதி இல்லாமல் பூராவும் பாதிக்கப்பட்டிருந்து, இறுதியாக இப்பொழுது, நான்கைந்து நாட்களுக்கு முன்பு அது சரிசெய்யப் பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அத்தகைய முறையில் ஒரு

இரண்டு பர்லாங்கு தூரத்திற்கு ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலை, அனுமதியின்றித் தூர்க்கக்கூடிய அளவுக்கு நிலையை உருவாக்கியவர் மீது அரசாங்கம் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் தனிப்பட்டோர் பாதை அமைத்ததாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால், அரசுக்குக் கிடைத்திருக்கும் தகவல்படி, ஊராட்சி ஒன்றியம்தான் அந்தப் பணியை மேற்கொண்டது என்பதாகும். வாய்க்கால் இப்பொழுது சீர்செய்யப்பட்டு விட்டதாக அரசுக்குத் தகவல் வந்திருப்பதால், மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த மாதுளம் வாய்க்காலின் சானல் புறம்போக்கு சப்-டிவிஷன் செய்யப்பட்டு, ஆர்.எஸ். 5, 7, 9 என்ற எண்கள் உள்ளன. இது பக்கா அரசாங்க சானல் புறம்போக்கு ஆகும். இதில் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாகப் பாதை போடுவதற்கு எந்தத் துறையின் மூலம் அனுமதி வழங்கப்பட்டது என்பது விளங்கவில்லை. வாய்க்காலைத் தூர்த்துப் பாதை போடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அந்த அனுமதி எப்பொழுது வழங்கப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பாதை போடுவதற்கு எப்பொழுது அனுமதி வழங்கப்பட்டது என்பதற்கான குறிப்பு இல்லை. தனிப்பட்ட நபர் போடவில்லை. ஊராட்சி ஒன்றியம் தான் பாதை அமைத்திருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தனிப்பட்ட நபர் எனது தொகுதிக்குப் பக்கத்தில் உள்ள குற்றாலத்தைச் சார்ந்த திரு. இராஜகோபால் வாண்டையார் என்பவர் அங்கே அந்த வாய்க்காலைத் தூர்த்துவிட்டதாக அங்கே நடைபெற்ற கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்களுடைய முன்னிலையில் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அவர்களிடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எடுத்துச்சொல்லப்பட்டு,

மகசருடைய பிரதிகளெல்லாம் இங்கே என்னிடத்தில் இருக்கின்றன என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொண்டு அது பற்றி இன்னும் அந்த நபர்மீது நடவடிக்கை எடுக்காதது ஏன் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனிப்பட்டவர் பாதை போட்டதாக மீண்டும், மீண்டும் குறிப்பிடுகிறார்கள். ஆனால், அரசுக்கு வந்த தகவல்—ஊராட்சி ஒன்றியம்தான் பாதை அமைக்க முற்பட்டு, அதன் காரணமாக மண் சரிவு ஏற்பட்டு வாய்க்கால் தூர்ந்துபோய்விட்டதாகச் சொல்லுகிறார்கள். இன்றைக்கு மீண்டும் வாய்க்கால் சரி செய்யப்பட்டுவிட்டது. ஊராட்சி ஒன்றியம் அந்தப் பணியை மேற்கொண்டதன் காரணத்தால் தற்போது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உறுப்பினர் அவர்களிடம் மேற்கொண்டு ஏதாவது தகவல் இருந்து, அதைத் தருவாரானால், அதுபற்றி விசாரிக்கச் சொல்கிறேன்.

Headmasters of Higher Elementary Schools.

* 166 *Q.*—THIRU K. T. K. TANGAMANI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Government have passed orders to appoint B.T. teachers as Headmasters in the Higher Elementary Schools with more than 400 students ;

(*b*) if so, number of such absorptions ;

(*c*) is there still such qualified teachers left out ; and

(*d*) steps taken to absorb them ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, (அ) ஆம். 1961 ஆம் ஆண்டு 400-ம் அதற்கு மேலும் மாணவர் எண்ணிக்கையுள்ள உயர் ஆரம்பப் பள்ளிகளில் பி.டி. தலைமையாசிரியர்கள் நியமனம் செய்வதற்கான ஆணையொன்று அரசால் இடப்பட்டது. அவ்வாணை 1966-67-ம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. பின்பு 1972-இல் வேலையின்மை நிவாரணத் திட்டத்தின்கீழ் நடுநிலைப் பள்ளிகளுக்கு 900 பி. டி. ஆசிரியர்கள் பதவிகள் தரப்பட்டன.